300 ஏக்கரில் மல்பெரி சாகுபடி செய்ய திட்டம்

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,01:54 IST

விழுப்புரம் : விழுப்புரம், கடலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 300 ஏக்கர் பரப்பளவில் மல்பெரிச் செடி சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளதாக உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) சந்திரசேகரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பு: விழுப்புரம், கடலூர் மாவட்டத்தில் நடப்பாண்டில் 300 ஏக்கர் பரப்பளவில் புதிய மல்பெரிச் செடி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. புதிய மல்பெரி நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 4125 ரூபாய் ஊக்க தொகையாக வழங்கப்படும். அதிகளவாக 2.50 ஏக்கர் வரை மானியம் வழங்கப்படும்.

பட்டு புழு வளர்ப்புக்கு 1500 சதுர அடி மனை கட்டும் பட்டு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியம் 75 ஆயிரம் ரூபாய் வீதமும், 1000 சதுர அடி புழு வளர்ப்பு மனை கட்டும் விவசாயிக்கு 50 சதவீதம் மானியம் 25 ஆயிரம் ரூபாய் வீதமும் வழங் கப்படும்.175 முட்டை தொகுதிகள் வரை ஒரு முறை புழு வளர்க்க 1200 சதுர அடிக்கு குறையாமல் தாங்கிகள் அமைத் தல் உட்பட 10 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பட்டு வளர்ப்பு உபகரணங்கள் வழங்கப்படும்.

ஒரு ஏக்கர் சொட்டு நீர் பாசனம் அமைக்கும் விவசாயிக்கு 75 சதவீதம் மானியம் 15 ஆயிரம் ரூபாய் வீதம் வழங் கப்படும். மேலும் விவரங்களுக்கு பட்டு வளர்ச்சி துறை உதவி இயக்குனர், எல் லீஸ் சத்திரம் சாலை, வழுதரெட்டி, விழுப்புரம் என்ற முகவரியிலும், 04146 -259312 என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.

**மாவுப்பூச்சி தாக்குதல் கட்டுப்படுத்த நடவடிக்கை மாவட்ட கலெக்டர் தகவல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,02:47 IST

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையம் மூலம் அடுத்த மாதம் விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது' என, விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், கலெக்டர் (பொறுப்பு) சீதாலட்சுமி கூறினார்.கலெக்டர் அலுவலக கூட்ட அரங்களில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது.கலெக்டர் (பொறுப்பு சீதாலட்சுமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில், கூட்டுறவு வங்கியில் கடன் வழங்க வேண்டும். மரவள்ளியில் மாவு பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வேளாண் விரிவாக்க மையங்களில் விவசாயத்துக்கு தேவையான இடுபொருட்களை இருப்பில் வைத்திருக்க வேண்டும். கொப்பரை தேங்காய் விற்பனைக்கு அடையாள அட்டை வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகள் குறித்து விவசாயிகள் பேசினர். விவசாயம் தொடர்பாக விவசாயிகளிடம் இருந்து 110க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டது.

தொடர்ந்து கலெக்டர் (பொறுப்பு) சீதாலட்சுமி பேசியதாவது:கடந்த மாதம் நடந்த கூட்டத்தில் விவசாயம் தொடர்பாக 17 மனுக்கள் பெறப்பட்டு, அம்மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு அனுப்பி அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குறித்து விவசாயிகளுக்கு தெரிவிக்கப்பட்டது. அதேபோல் இந்த கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கு நடவடிக்கை எடுத்து தீர்வு காணப்படும். நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் அடுத்த மாதம் விவசாயிகளுக்கு விவசாயம் தொடர்பான பயிற்சி அளிக்கப்படுகிறது. அக்டோபர் 12ம் தேதி செம்மை நெல் சாகுபடி தொழில் நுட்பம் குறித்தும், 14ம் தேதி கறவை மாடுகளுக்கு நோய் தடுப்பு முறை பயிற்சியும், 19ம் தேதி கொல்லிமலையில் அன்னாசி பயிர் சாகுபடி குறித்த பயிற்சியும், 21ம் தேதி நாட்டுக்கோழிக்கு அம்மை நோய் தாக்குதல்  மற்றும் தடுப்பு குறித்த பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியில் விவசாயிகள் அதிக அளவில் பங்கு பெற்று பயன்பெறலாம்.

மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் விவசாயத்துக்கு தேவையான பயிர் மற்றும் நகைக்கடன் வழங்க வேண்டும். அதேபோல் விவசாயிகளுக்கு இடுபொருட்கள் எவ்வித தட்டுப்பாடு இல்லாமல் வினியோகம் செய்ய வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத்திருக்க வேண்டும்.நாமக்கல் மாவட்டத்தில் 3,490 ஹெக்டேரில் மாவுப்பூச்சி தாக்குதல் இருப்பதாக கண்டறியப்பட்டு, வேளாண் துறை மூலம் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யும் விவசாயிகளுக்கு அடையாள அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அடையாள அட்டை தேவைப்படும் விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண் உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளலாம். மாவட்ட நிர்வாகத்தின் மூலம் விவசாயிகள் குறைகள் அவ்வப்போது நிவர்த்தி செய்ய உரிய நடவடிக்கை

மேற்கொள்ளப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.வேளாண் இணை இயக்குனர் சிவராஜ், உதவி இயக்குனர் பிரபாகரன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் ராஜா, வேளாண் அறிவியல் நிலைய ஒருங்கிணைப்பாளர் மோகன், அரசு அலுவலர்கள், விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**ராகி கூடுதல் மகசூல்: வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,00:06 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மானாவாரி ராகி பயிரில் தற்போது விவசாயிகள் இடை உழவு செய்து மேலுரம் இட்டு அதிக மகசூலை பெறலாம்' என வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடப்பு மானாவாரி பருவத்தில் சுமார் 60,000 ஹெக்டேரில் ராகி பயிர் நேரடி விதைப்பு செய்து சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அரிசி தானியத்துக்கு அடுத்தப்படியாக ராகி இரண்டாவது நிலை தானியமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் கெலமங்கலம், தளி, ஓசூர் ஆகிய வட்டாரங்களில் ராகி மிக அதிக அளவில் சாகுபடி செய்யப்படுவதால் இந்த பகுதியில் விளைவிக்கப்படும் ராகி தானியம் சுத்தம் செய்யப்பட்டு மெருகூட்டப்பட்டு அண்டை மாநிலங்களுக்கும் கொள்முதல் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது.

ராகி பயிர் சமீபத்தில் பெய்த மழையினால் வளர்ச்சி அடைந்து நல்ல நிலையில் உள்ளது. ராகி பயிர் களைத்து பயிரின் எண்ணிக்கையை குறைப்பதால் மகசூல் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. ராகி பயிருக்கு தழைச்சத்தினை மேலுரமாக இட வேண்டிய பருவத்திலும் உள்ளது.

வயலில் போதிய ஈரம் இருக்கும் போது 18 கிலோ யூரியாவை ஒரு ஏக்கரில் ஒரே சீராக படுமாறு யூரியாவை தூவி கொரு கலப்பை கொண்டு இடை உழவு செய்யலாம். இவ்வாறு செய்வதன் மூலம் புதிய தூர்களை உருவாக்கும் வாய்ப்பும் உள்ளதுடன் களைத்த தூர்கள் வயலில் மேலுரமாக இட்ட தழைச்சத்தினை பயன்படுத்தி திரட்ச்சியான கதிர்களை உருவாக்கும்.

மேலுரமாக இடும்போது பெரிய குருணை யூரியாவினை பயன்படுத்தலாம். இந்த பெரிய குருணை யூரியா வடிவத்தில் பெரியதாக இருப்பதால் சற்று நிதானமாக கரைந்து தழைச்சத்தினை சற்று நீண்ட காலத்துக்கு கொடுக்கும். பெரிய குருணை யூரியா அனைத்து தொடக்க வேளாண்

கூட்டுறவு வங்கிகள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மேலும் விபரங்கள் அறிய அருகில் உள்ள வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம்.

**தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகள் அலைக்கழிப்பு : குறைதீர் கூட்டத்தில் குமுறல்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,22:27 IST

உடுமலை : தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், ஒரு லட்சம் ரூபாய்க்கு குறைவாக விவசாய கடன் பெற்றால், படிவம் 26 தேவையில்லை என அரசு உத்தரவு உள்ள நிலையில் சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் விவசாயிகளை அலைக்கழித்து வருகின்றன. உடுமலை கோட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர் கூட்டம் கோட்டாட்சியர் சோமசேகரன் தலைமையில் நடந்தது.

விவசாயிகள் பேசியதாவது : தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், ஒரு லட்சம் ரூபாய்க்கு குறைவாக விவசாய கடன் பெற்றால், ஒப்பந்தம் தேவையில்லை என அரசும், உயர் அதிகாரிகள் உத்தரவும் உள்ளது. ஆனால், சம்பந்தப்பட்ட நிர்வாகங்கள் விவசாயிகளை அலைக்கழித்து வருகின்றன. பட்டா, சிட்டா, ஆவணங்கள் என இதனால் விவசாயிகளுக்கு 5 ஆயிரம் ரூபாய் வீணாகிறது.

நரசிங்காபுரம் பகுதியில் விதிமுறை குவாரிகள் மற்றும் கிரசர்கள் இயங்கி வருகின்றன. விதி முறை மீறியதால் உரிமம் ரத்து செய்யப்பட்ட நிறுவனங்களுக்கு மீண்டும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதோடு, உடுமலை தாலுகாவில் விவசாய நிலத்திற்கு மத்தியில் விதி முறை மீறி அனுமதி அளிக்க வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறை அதிகாரிகள் தடையில்லா சான்று வழங்கியுள்ளனர். இது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும். ஜல்லிபட்டியில் குளம் அமைக்க நிலம் எடுத்தும், இதுவரை விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கவில்லை; குளமும் அமைக்கப்படவில்லை. பூளவாடி வங்கியில் விவசாயிகள் கடன் கட்டியும் ஆவணங்களை திருப்பி தர அதிகாரிகள் மறுத்து வருகின்றனர்.

கண்ணமநாயக்கனூர் பி.ஏ.பி., வாய்க்காலில் குப்பைகள் கொட்டப்படுகிறது. மேலும், கட்டுமான கழிவுகள் பெருமளவு கொட்டப்பட்டு வாய்க்கால் முழுவதும் மறைந்து வருகிறது. திருமூர்த்தி அணை மூலம் பயன்பெறும் ஏழு குளங்களில் எட்டு மாதம் வரை தண்ணீர் இருக்கும். மீதம் இருக்கும் இரண்டு மாதத்தில் விவசாய விளை நிலங்களுக்கு மண் எடுக்கப்பட்டு, குளம்

தூர்வாரப்பட்டு வருகிறது. ஆனால் , புதிதாக கனிம வளத்துறை அனுமதி பெற வேண்டும் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதனால், குளம் முழுவதும் மண் மூடியும், ஆக்கிரமிப்புகள் அதிகரித்தும் காணப்படுகிறது. தண்ணீர் தேங்க முடியாமல் வீணாகி வருகிறது. மேலும், பாசன சங்க விதிமுறைகளின் படி, மீன் வளர்ப்பு உட்பட அனைத்து உபரி வருமானங்களும் பாசன சங்கத்திற்கு வழங்கி, குளம் பராமரிக்க வேண்டும் என்ற விதி உள்ளது. ஆனால், அதிகாரிகள் நிதி ஒதுக்குவதில்லை. இதனால், ஏழு குளம் பாசனம் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளது. இதற்கு, சிறப்பு நிதி ஒதுக்கி பராமரிக்க வேண்டும் என்றனர்.

அதிகாரிகள் கூறியதாவது: தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஒரு லட்சம் ரூபாய்க்கு குறைவாக வாங்கப்படும் கடன்களுக்கு படிவம் 26 தேவையில்லை என உத்தரவுள்ளது. மீறும் வங்கி செயலாளர்கள் மீது விவசாயிகள் உயர் அதிகாரிகளிடம் புகார் செய்யலாம். ஏழு குளம் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ளது; இதுவரை எந்த நடைமுறை உள்ளதோ அது தொடரும்.

மின் வாரிய அதிகாரிகள், உடுமலை கோட்டத்திலுள்ள 15,200 விவசாய மின் இணைப்புகளில் பயன்படுத்தப்படும் மின் மோட்டார்கள் மாற்றும் திட்டத்தின் கீழ், இதுவரை 14 ஆயிரம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் வழங்காத விவசாயிகள் விரைவில் சம்பந்தப்பட்ட மின் வாரிய அலுவகத்தில் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து வழங்க வேண்டும். ஒவ்வொரு மாதமும் 4 வது புதன் கிழமை கோட்ட அளவிலான மின் நுகர்வோர் கூட்டம் நடக்கிறது. அதில், விவசாயிகள் பங்கேற்க வேண்டும்' இவ்வாறு பேசினர். இதில், தாசில்தார்கள் சபாபதி, லியாகத்அலி, ஜீவா மற்றும் அரசு துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

**ரூ.40 கோடி பயிர்க்கடன் இலக்கு : கூட்டுறவு வங்கிகள் திட்டம்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 24,2010,00:32 IST

சிவகங்கை : கூட்டுறவுத்துறை மூலம், நடப்பு ஆண்டில் 40 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்க, இலக்கு நிர்ணயிக் கப்பட்டுள்ளது.
இணை பதிவாளர் ஜெயம் கூறியதாவது: மாவட்டத்தில் கரும்பு, நெல், நிலக்கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு கடன் வழங்கப்படுகிறது. நடப்பு ஆண்டு இது வரை 3,800 விவசாயிகளுக்கு, 10

கோடி ரூபாய் வரை வழங்கப்பட்டுள்ளது. சொட்டு நீர் பாசன வசதிக்காக நான்கு கோடி ரூபாய் வரை கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. இதுவரை 61 லட்சம் வரை வழங்கப்பட் டுள்ளது. வட்டி குறைப்பு: கூட்டுறவு வங்கிகள் மூலம் கடந்த 2007 மார்ச் 31 ம் தேதி வரை, பண்ணை சாரா கடனா க, 2,820 பேர் 14.44 கோடி ரூபாய் வரை பெற்றனர். இதற்கான வட்டி 18 முதல் 20 சதவீதம் வரை இருக்கும்.

இக்கடனை திரும்ப செலுத்தாமல் தவணை தவறியவர்களுக்கு, வட்டி குறைப்பு திட்டத்தை அரசு அறிமுகம் செய்துள்ளது. இதன்படி, 2007 மார்ச் 31 வரை தவணை தவறிய கடன் தாரர்கள், 10 சதவீத வட்டியுடன் கடனை திரும்ப செலுத்தலாம். இத்திட்டம் மூலம் கடன் தாரர்களிடம் 8.43 கோடி ரூபாய் வசூலிக்கப்படும். ஆறு கோடி ரூபாய் வரை தள்ளுபடியாகும். இந்த வாய்ப்பை பயன்படுத்தி கடன்தாரர்கள் குறைந்த வட்டியுடன் கடனை திரும்ப செலுத்தவேண் டும். இச்சலுகை நவ.,15 ம் தேதி வரை உள்ளது என்றார்.

**கரும்பு சாகுபடி கருத்தரங்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 25,2010,04:14 IST

பெரியதாழை : தட்டார்மடம் அருகேயுள்ள போலையர்புரத்தில் விவசாயிகள் கலந்து கொண்ட பயிரிடும் முறை குறித்த விளக்க கூட்டமும், கரும்பு சாகுபடி கருத்தரங்கமும் நடந்தது.போலையர்புரம் சேகரகுரு மோசஸ் ஜெபராஜ் தலைமை வகித்தார். எம்.பி.சர்க்கரை ஆலை முதுநிலை பொது மேலாளர் அனந்தபத்மன், இயக்குநர் பிரதீப், துணை நிர்வாக இயக்குநர் ஜெபச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விவசாய சங்கத் தலைவர் டேனியல் தன்ராஜ் வரவேற்றார்.

கலந்து கொண்ட விவசாயிகளுக்கு கரும்பு சாகுபடி பற்றிய குறும்படம் காண்பிக்கப்பட்டது. சாகுபடி குறித்த விளக்கங்களை விவசாயிகள் கேட்டறிந்தனர். விளக்கங்களை சாத்தான்குளம் உதவி கரும்பு அலுவலர் பழனிச்சாமி, கரும்பு ஆய்வாளர்கள் ராஜேஷ்கண்ணன், வடிவழகன், இசை செல்வன், நான்குநேரி கரும்பு கோ ட்ட அலுவலர் ராஜ்
குமார் ஆகியோர் எடுத்துக் கூறினர். விவசாய சங்கத்தைச் சேர்ந்த ராபின்சன், மங்களாசுபாஷ், துரைராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர். வேதராஜ் நன்றி கூறினார்.

நடப்பு க ப் பருவத்தில் பருப்பு வகைகள் உற்பத்தி 60 லட்சம் டன்னாக உயரும்



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு
புதுடெல்லி
நடப்பு கரீஃப் பருவத்தில் (ஜூன் – அக்டோபர்) நம் நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தி 60 லட்சம் டன்னாக உயரும் என அமெரிக்க வேளாண் துறை தெரிவித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தை விட 40 சதவீதம் அதிகமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. அப்பருவத்தில் நாட்டின் பருப்பு வகைகள் உற்பத்தி 43 லட்சம் டன்னாக இருந்தது.

பருப்பு சாகுபடி

நடப்பு நிதி ஆண்டில், நம் நாட்டில் பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 8 சதவீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் நடப்பு ஆண்டில் இதுவரை பயிரிடும் பரப்பளவு சுமார் 20 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது. செப்டம்பர் 9–ந் தேதி வரை, நம் நாட்டில் ஏறக்குறைய 1.10 கோடி ஹெக்டேர் நிலப்பரப்பில் பருப்பு வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இது, சென்ற ஆண்டின் இதே காலத்தில் 90.57 லட்சம் ஹெக்டேராக இருந்தது. சென்ற நிதி ஆண்டில் நம் நாட்டில் சுமார் 1.48 கோடி டன் பருப்பு வகைகள் உற்பத்தியாகியுள்ளது. இது, அதற்கு முந்தைய ஆண்டைக் காட்டிலும் 2 லட்சம் டன் அதிகமாகும்.

கடந்த பல ஆண்டுகளாக நம் நாட்டில் பருப்பு வகைகள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக

பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் எதிர்பார்த்த அளவிற்கு உற்பத்தி அதிகரிக்கவில்லை. இந்நிலையில் உள்நாட்டு தேவையை ஈடு செய்ய வேண்டுமானால், குறைந்தபட்சம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு பல்வேறு பருப்பு வகைகளை அதிக அளவில் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும் என்று கூறப்படுகிறது. அடுத்த பத்து ஆண்டுகளில் உள்நாட்டில் பருப்பு வகைகளுக்கான தேவைப்பாடு ஆண்டுக்கு 2.38 கோடி டன்னாக அதிகரிக்கும் என அரசு மதிப்பீடுகள் தெரிவித்துள்ளன.

நடப்பு கரீஃப் பருவத்தில், நம் நாட்டில் அனைத்து உணவு தானியங்களின் ஒட்டுமொத்த உற்பத்தி 11.46 கோடி டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே பருவத்தில் 10.38 கோடி டன்னாக இருந்தது.

நெல் உற்பத்தி

நடப்பு பருவத்தில் நாட்டின் நெல் உற்பத்தி 6 சதவீதம் உயர்ந்து 8.04 கோடி டன்னாக அதிகரிக்கும் என மத்திய அரசின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. சென்ற 2009–10–ஆம் ஆண்டின் இதே பருவத்தில் நெல் உற்பத்தி 7.59 கோடி டன்னாக இருந்தது. அதே சமயம் கடந்த 2008–09–ஆம் ஆண்டு கரீஃப் பருவத்தில் நெல் உற்பத்தி வரலாறு காணாத அளவிற்கு 8.49 கோடி டன்னாக இருந்தது. சென்ற ஆண்டில் உற்பத்தி சரிவடைந்ததற்கு, தென்மேற்கு பருவமழை பொய்த்து 300 மாவட்டங்களில் ஏற்பட்ட வறட்சியே காரணமாகும்.

## அக்டோபர் மாதம் தொடங்கும் புதிய பருவத்தில் எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க சர்க்கரைத் துறை நிறுவனங்கள் திட்டம்



கவுரி அக்தே அதாலே

பூனா

அக்டோபர் மாதம் தொடங்கும் புதிய பருவத்தில், எத்தனால் உற்பத்தியை பன்மடங்கு அதிகரிக்க சர்க்கரைத் துறை நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. சர்க்கரை அளிப்பு தாராளமாக உள்ள நிலையில் சர்க்கரை விற்பனை வாயிலான லாப வரம்பு சரிவடையும் என இந்த நிறுவனங்கள் கருதுகின்றன. இதனை ஈடு செய்யும் வகையில், உப பொருளான எத்தனால் உற்பத்தியை அதிகரிக்க தயாராகி வருவதாக இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர்.

சர்க்கரை பருவம்

நடப்பு செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைய உள்ள சர்க்கரை பருவத்தில் மகாராஷ்டிரா உள்ளிட்ட முக்கிய மாநிலங்களில் கரும்பு விளைச்சல் அமோகமாக இருக்கும் என தெரிகிறது. இந்நிலையில் மகாராஷ்டிரா மாநில சர்க்கரை ஆலைகள் ரூ.20 செலவில் ஒரு லிட்டர் எத்தனாலை தயாரிக்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளன.

பெட்ரோலிய பொருள்களை சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் ஒரு லிட்டர் எத்தனாலுக்கு ரூ.27 விலை கொடுக்க தயாராக உள்ளன. எனவே ஒரு லிட்டர் எத்தனால் விற்பனையில் ஆலைகளுக்கு ரூ.7 லாபம் கிடைக்கும். மாநிலத்தில் ஓர் ஆண்டுக்கு தேவைப்படும் 13 கோடி லிட்டர் எத்தனாலை தயாரித்தளிக்க முடிந்தால் இவ்வாலைகள், எதிர்வரும் புதிய பருவத்தில் ரூ.91 கோடி லாபம் ஈட்ட இயலும். மகாராஷ்டிர மாநிலம் ஆண்டுக்கு 25 கோடி லிட்டர் உற்பத்தி திறனில் 65

*வடிப்பாலைகளைக் கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இது குறித்து எஸ்.எஸ்.கே. நிறுவனத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் இந்திரஜித் மோத் கூறும்போது, "பாகு கழிவின் விலை டன்னுக்கு ரூ.2,000 என்ற அளவில் நிலையாக இருந்தால், 80 முதல் 90 லட்சம் டன் கரும்பை அரைக்க முடியும். ரூ.7–9 செலவில் ஒரு டன் பாகு கழிவில் 270 லிட்டர் சாராயம் பெறலாம். எத்தனால் தயாரிக்க மேலும் லிட்டருக்கு கூடுதலாக ரூ.6–8 செலவிட வேண்டியிருக்கும். எனவே புதிய பருவத்தில் ஒரு லிட்டர் எத்தனாலை ரூ.18–19 செலவில் தயாாரித்து ரூ.27–க்கு விற்கு முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. போக்குவரத்து செலவு காரணமாக சில ஆலைகளுக்கு இது ரூ.25–ஆக குறைய வாய்ப்புள்ளது. என்றாலும் இதுவும் நல்ல விலைதான்" என்று கூறினார்.*

*எவ்வாறாயினும் ஒரு லிட்டர் எத்தனால் விற்பனையில் குறைந்தபட்சம் ரூ.5–ஐ நிகர லாபமாகப் பெற முடியும் என சில நிறுவனங்களின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.*

*மகாராஷ்டிர மாநிலத்தில் பழம்பெரும் தனியார் சர்க்கரை நிறுவனமான சாஸ்வத் மாலி அதன் ஆலையில் கிடைக்கும் எரிசாராயத்தில் 40 சதவீதத்தை எத்தனாலாக மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. அதாவது 35 லட்சம் லிட்டர் எத்தனாலை தயாரிக்க முடிவு செய்துள்ளதாகவும், ஒரு லிட்டருக்கு உறுதியாக ரூ.5 லாபம் கிடைக்கும் என்றும் இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ராஜேந்திர கிர்மி கூறினார்.*

*கொள்முதல் விலை*

*அதே சமயம் 2011–12 சர்க்கரை பருவத்தில் ஒரு லிட்டர் எத்தனால் கொள்முதல் விலையை தற்போதைய ரூ.27 என்ற அளவிலிருந்து மத்திய அரசு குறைக்குமானால் ஆதாயம் இல்லை என்றும் நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. மகாராஷ்ரா மாநிலம் 8.25 கோடி டன் கரும்பு உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனையடுத்து மாநிலத்தில் பாகுகழிவு மற்றும் சாராயம் உற்பத்தி பெருமளவு அதிகரிக்கும்.*

*மகாராஷ்டிர மாநிலத்தின் வடிப்பாலைகள் சங்கத்தின் செயலாளர் எஸ்.ஜி. கேத்கார் இது குறித்து கூறுகையில், "எதிர்வரும் புதிய பருவத்தில் 36 லட்சம் டன் பாகுகழிவு கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். இதில் 5 சதவீதம் கால்நடைகளுக்கு தீவனமாக சென்று விடும். மீதமுள்ள அளவு சாராய உற்பத்திக்காக பயன்படும். எனவே மாநிலத்தில் சாராய உற்பத்தி 65–70 கோடி லிட்டராக அதிகரிக்கும்" என்று தெரிவித்தார்.*